செய்தி வெளியீடு எண்: 549 நாள் : 31.10.2015

**<u>மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எப்பொழுதும் இல்லாத வகையில் கொடை உள்ளத்துடன் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி தமிழ் வளர்ச்சித் துறையினுடைய வரலாற்றிலேயே முத்திரை பதித்துள்ளதை உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை நிருவாகக்குழுப் பாராட்டித் தீர்மானம்</u>**

உலகத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் பத்தாவது நிருவாகக்குழுக் கூட்டம் சென்னையில் தலைமைச் செயலகத்தில் 28.10.2015 அன்று நடைபெற்றது. மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்கள் தலைமையேற்றார். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் அரசு செயலாளர் முனைவர் மூ.இராசாராம் இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டார். இக்கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களைப் பாராட்டித் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழின் மீது மிகுந்த பற்று கொண்டு விதி 110இன் கீழ் பல திட்டங்களை அறிவித்திருப்பதற்கு மகிழ்ந்து நன்றி பாராட்டப்பட்டது.

அம்மா இலக்கிய விருது, 10 பேருக்கு மொழி பெயர்ப்பாளர் விருது, 3 பேருக்கு உலகத் தமிழ்ச் சங்க விருது, பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்தநாளைக் கவிஞர் நாளாகக் கொண்டாடுதல், கொரிய மொழியில் திருக்குறளை மொழிபெயர்த்தல், அரபு மொழியில் ஆத்திசூடியை மொழிபெயர்த்தல், கொரிய – தமிழ் வேர்ச்சொல் ஆய்வு ஆகிய திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இத்திட்டங்கள் தமிழுக்கும் தமிழறிஞர்களுக்கும் ஊக்கத்தையும் உவகையையும் அளிக்கவல்லன.

உலகத் தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பல திட்டங்களுக்கு இசைவளித்து நிதியுதவியும் வழங்கியுள்ளார்கள். பன்னாட்டுக் கருத்தரங்குகள் ஆஸ்திரேலியாவில் தமிழர், உலகத் தமிழ் எழுத்தாளர்கள் பன்னாட்டுப் பரிமாற்ற அரங்கம், உலகத் தமிழ் அமைப்பினர் மற்றும் தமிழறிஞர்கள் பன்னாட்டுக் கலந்துரையாடல் அரங்கம், பன்னாட்டுத் திருக்குறள் மாநாடு, புலம்பெயர் நாடுகளில் தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்கள் ஆகியவற்றையும் மலேசியா, ஆஸ்திரேலியா நாடுகளுக்குச் சென்று அயலகத் தமிழ் மாணவர்கள் தமிழ் கற்றலில் உள்ள சிக்கல்களும் தீர்வுகளும் ஆகிய பன்னாட்டுக் கருத்தரங்குகளையும் குறுகிய காலத்தில் நடத்தியுள்ளது. தேசியக் கருத்தரங்குகள் ஐந்து, கருத்தரங்குகள் ஒன்பது, தமிழ் அரங்கங்கள் நான்கு, சிறப்புச் சொற்பொழிவுகள் ஏழு, கலந்துரையாடல்கள் நான்கு, சிறப்புப் பயிலரங்கங்கள், தமிழ் இலக்கியக் கலை விழா இரண்டு எனப் பல நிகழ்வுகள் உலகத் தமிழ்ச் சங்கத்தால் நடத்தப்பட்டுள்ளன.

உலகத் தமிழ்ச் சங்கப் பெருந்திட்ட வளாகம் கட்ட 25கோடி நிதி வழங்கியமைக்கும் பல திட்டங்களை மேற்கொள்ள நிதியுதவி அளித்தமைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி பாராட்டும் விதமாக உலகத் தமிழ்ச் சங்கப் பத்தாவது நிருவாகக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## வெளியீடு:

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**